

தென்காசி சிந்தாமணியில் வசித்து வரும் கழக முன்னோடி ஈஸ்வரன் அவர்களின் மகனும்,தென்காசி வடக்கு மாவட்ட செயலாளர் வாசுதேவநல்லூர் சட்டமன்ற உறுப்பினர் ஈ.ராஜாவின் அண்ணன் தென்காசி 31 வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் ஈ.பாலமுருகன் (வயது 43) கடந்த 03.10.2026 சனிக்கிழமை அன்று இயற்கை எய்தினார்.அன்னாரது இல்லத்திற்கு கழக துணை பொதுச் செயலாளர் கனிமொழி ராஜாத்தி கருணாநிதி எம்.பி.அவர்கள் நேரில் வந்து மறைந்த ஈ.பாலமுருகன் அவர்களின் திருஉருவப்படத்திற்கு மாலை அணிவித்து மலர் தூவி அஞ்சலி செலுத்தினார்.அதனைத் தொடர்ந்து குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறினார். உடன் தென்காசி வடக்கு மாவட்ட செயலாளர் ஈ.ராஜா எம்.எல்.ஏ.தெற்கு மாவட்ட பொறுப்பாளர் வே.ஜெயபாலன், தென்காசி மரு.ராணி ஸ்ரீகுமார் எம்.பி. நகர செயலாளர் சாதிர் உள்பட கழகத்தினர் பலர் உள்ளனர்.

செவிலியர்கள் – குழந்தைகள் மீது கோமாளி ஆட்சியாளர்கள் தாக்குதல் நடத்துவது வெட்கக்கேடு!

செவிலியர்களின் கோரிக்கைகளைத் தீர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டும்!

எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் வலியுறுத்தல்!

சென்னை, அக். 7 -

கோமாளி ஆட்சியாளர்கள் காவல்துறையை ஏவி செவிலியர்கள் - குழந்தைகள் மீது தாக்குதல் நடத்துவது வெட்ககேடு என்றும் செவிலியர்களின் கோரிக்கைகளைத் தீர்க்க, பேச்சுவார்த்தை நடத்தி நடவடிக்கை எடுத்திட வேண்டும் என்று தமிழ்நாடு சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வலியுறுத்தியுள்ளார்.

இது குறித்து தமிழ்நாடு சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், தமது டுவிட்டர் பதிவில் கூறியிருப்பதாவது:

பணி நிரந்தரம் சம வேலைக்குச் சம ஊதியம் உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி போராடும் செவிலியர்கள் மீது காவல் துறையினரை ஏவி கண்மூடித்தனமாக தாக்குதல் நடத்தி இருக்கும் இந்த Dummy CMன் அரசை வன்மையாக கண்டிக்கிறேன்.

எதிர்க்கட்சியாக இருந்த போது, ஆட்சிக்கு வந்த முதல் நாளிலேயே செவிலியர்களை பணி நிரந்தரம் செய்வோம் என்று சொன்ன இன்றைய கோமாளி ஆட்சியாளர்கள், இன்றைக்கு செவிலியர் போராட்டத்திற்கு முதல்



ஆளாக காவல்துறையை அனுப்பி அராஜகம் செய்கின்றனர்.

ஒருபக்கம், போராட்டக்களத்தில் சிறிய இடத்தில் செவிலியர்களை அடைப்பது மின் சாரத்தை நிறுத்துவது உயிர் வேணுமா வேண்டாமா என்று மிரட்டுவது என அத்து மீறும் இந்த ஆட்சியாளர்கள் மறுப்பக்கம், Abusive Warriors மூலம் செவிலியர்களையும் அவர்களின் போராட்டத்தையும் கொச்சைப் படுத்துவது அநாகரிகத்தின் உச்சம்.

செவிலியர்கள் மீது சிறு கீறல் விழுந்தாலும் பொறுக்க மாட்டோம் என அன்றைக்கு punch dialog பேசிவிட்டு, இன்றைக்கு போராடும் செவிலியர்களை மட்டுமின்றி அவர்களின் குழந்தைகள் மீது கூட தாக்குதல் நடத்துவது வெட்கக்கேடு.

குழந்தைகளைத் தாக்குவதற்கு பெயர் என்ன தாய்மாமன் தடியடி திட்டமா?

பெட்டி வேட்பாளரின் போலிக் கண்ணீரை துடைப்பதற்காக நீளும் முதல்வரின் கரங்கள், உயிர்காக்கும் செவிலியர்களின் உண்மைக் கண்ணீரைத் துடைக்க மறுப்பது ஏன்?

செவிலியர்கள் மீதான அடக்குமுறையை உடனே நிறுத்தி, அவர்களை பேச்சுவார்த்தைக்கு அழைக்க வேண்டும். அவர்களின் கோரிக்கைகளைத் தீர்த்து வைப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென இந்த அரசை வலியுறுத்துகிறேன்.

இவ்வாறு உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தெரிவித்துள்ளார்.

பணி நிரந்தரம் உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி

உண்ணாவிரதப் போராட்டம் நடத்திய செவிலியர்கள் குண்டுக்கட்டாக கைது!

நம்ப வைத்து விஜய் அரசு ஏமாற்றி விட்டது! செவிலியர்கள் குற்றச்சாட்டு!

சென்னை, அக். 7 –

பணி பாதுகாப்பு, பணி நிரந்தரம், சம வேலைக்கு சம ஊதியம் உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி, செவிலியர்கள் உண்ணாவிரதப் போராட்டம் நடத்தினர். அவர்களை பேச்சுவார்த்தைக்கு அழைத்து செல்வதாக கூறி போலீசார் கைது செய்தனர். இதனால், பேருந்துகளை மறித்து அரசுக்கும், போலீசாருக்கும் எதிராக கண்டன கோஷங்கள் எழுப்பினர். இதில் பலர் மயங்கியதால் பரபரப்பு ஏற்பட்டது. சம வேலைக்கு சம ஊதியம், பணி நிரந்தரம், பணி பாதுகாப்பு உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி தமிழ்நாடு இடைநிலை சுகாதாரப் பணியாளர்கள் சங்கத்தை சேர்ந்த 500க்கும் மேற்பட்ட செவிலியர்கள் சென்னை எழும்பூரில் உள்ள ராஜரத்தினம் மைதானம் அருகில் நேற்று முன்தினம் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

பேச்சு வார்த்தைக்கு என்று அழைத்து கைது செய்துள்ளனர்!

கையில் பதாகைகள் ஏந்தியபடி த.வெ.க. அரசு தேர்ந்தெடுக்கும் முன்பு கொடுத்த தேர்தல் வாக்குறுதிகளை நிறைவேற்ற வேண்டும் என்ற வலியுறுத்தி கோஷங்களை எழுப்பினர். மேலும் அரசு சார்பில் எங்களிடம் பேச்சுவார்த்தை நடத்தி கோரிக்கைகள் நிறைவேற்றும் வரை போராட்டம் தொடரும் என்று கூறி தொடர்ந்து போராட்டத்தில் ஈடுபட்டு வந்தனர். அப்போது அவர்களிடம் பேச்சுவார்த்தைக்கு வரமாறு அரசு சார்பில் அழைத்துள்ளனர். சரி பேச்சுவார்த்தைக்கு தான் கூப்பிடு கிறார்கள் என்று போராட்டத்தில் பங்கேற்றவர்களில் 5 செவிலியர்கள் சென்றுள்ளனர். ஆனால் பேச்சுவார்த்தையில் உடன்பாடு எட்டாத நிலையில் போராட்டம் தொடரும் என்று கூறியதையடுத்து பேச்சுவார்த்தைக்கு அழைத்து சென்ற 5 செவிலியர்களை கைது செய்து



தனியார் மண்டபத்தில் அடைத்தனர்.

அதன்பிறகு இரவு 9 மணியளவில் போராட்டம் நடந்த இடத்திற்கு வந்த போலீசார் செவிலியர்களிடம் போராட்டத்தை கைவிடுமாறு கூறினர். ஆனால், அவர்கள் போராட்டத்தை கைவிட மறுத்து அவர்களும் கோரிக்கைகள் நிறைவேறும் வரை தொடரும் என்று தெரிவித்தனர். பின்னர் சிறிது நேரத்தில் போராட்டத்தில் ஈடுபட்ட செவிலியர்களை வலுக்கட்டயமாக கைது செய்து பேருந்தில் ஏற்றினர். அப்போது சிலர் பேருந்தில் ஏற மறுத்து செவிலியர்களை கைது செய்த பேருந்தை மறித்து சாலை மறியலில் ஈடுபட்டனர். ஆனாலும் போலீசார் அவர்களை விடாமல் வலுக்கட்டாயமாக கைது செய்து பேருந்தில் ஏற்றினர். அப்போது போலீசார் மற்றும் செவிலியர்களுக்கு இடையே தள்ளுமுள்ளு, வாக்கு வாதம் ஏற்பட்டது. இதில் சில செவிலியர்கள் மயக்கமடைந்தனர்.

மேலும் செவிலியர்கள் முன்னேறி செல்லாத வகையில் அவர்கள் அமர்ந்திருந்த இடத்தை சுற்றி போலீசார் தடுப்புகள் அமைத்தனர். இதனால் செவிலியர்கள் போலீசார் மற்றும் அரசுக்கு எதிராக கோஷங்கள் எழுப்பி மொபைலில் டார்ச் லைட் அடித்து போராட்டத்தை தொடர்ந்தனர்.

இதுகுறித்து, தமிழ்நாடு இடைநிலை சுகாதாரப் பணியாளர் சங்க தலைவர் சுந்தரி நிருபர்களிடம் கூறியதாவது: இடைநிலை சுகாதாரப் பணியாளர்களுக்கு பணி நிரந்தர மும் ஊதிய உயர்வும் அரசு வழங்க வேண்டும். செவிலியர்களுக்கு வழங்கும் ரூ.21,000 ஊதியத்தில் எப்படி வாழ்க்கையை நடத்த முடியும்?, 2023, 2024ம் ஆண்டுக்கான ஊக்கத்தொகை இதுவரை வழங்கப்படவில்லை. இடைநிலை சுகாதார செவிலியர்களுக்கு ஊதியத்துடன் கூடிய மகப்பேறு விடுப்பு வழங்க வேண்டும்.

அத்துடன் செவிலியர்களுக்கு சமூக சுகாதார அதிகாரி என்ற பணி பெயரும், அதற்கான சான்றிதழும் வழங்குவதுடன், இடைநிலை சுகாதாரப் பணியாளர்களுக்கு எம்.எல்.எச்.பி.க்கு பதவி உயர்வு என முதலமைச்சர் கொடுத்த தேர்தல் வாக்குறுதியை நிறைவேற்ற வேண்டும். செவிலியர்களின் கோரிக்கைகள் நிறைவேறும் வரை போராட்டம் தொடரும். உண்ணாவிரத போராட்டமாக நாங்கள் இந்த போராட்டத்தை மேற்கொண்டு வருகிறோம். சுகாதாரத்துறை அமைச்சர், செயலாளர் அழைத்துப் பேச வேண்டும். எங்கள் கோரிக்கைகளை நிறைவேற்றி போராட்டத்தை நிறைவு செய்ய வேண்டும். இவ்வாறு அவர் கூறினார். செவிலியர்கள் கைதுக்கு அரசியல் கட்சி தலைவர்கள் மற்றும் பல்வேறு அமைப்பினர் கண்டனம் தெரிவித்துள்ளனர்.

சாமியானா பந்தல் அகற்றம்!

தலைமைச் செயலகத்துக்கு பேச்சுவார்த்தைக்கு வருமாறு 5 செவிலியர்களை அரசு சார்பில் அழைத்து சென்றுள்ளனர். ஆனால் அவர்களிடம் பேச்சுவார்த்தை நடத்தாமல் அவர்களை கைது செய்து தனியார் மண்டபத்தில் அடைத்து வைத்துள்ளனர். மேலும் வெயிலுக்காக போடப்பட்ட சாமியானா பந்தல்களையும் போலீசார் அப்புறப்படுத்தியுள்ளனர்.

குழந்தையை தாக்கிய போலீசார்!

ஒரு சில செவிலியர்கள் போராட்டத்திற்கு குழந்தையுடன் வந்தனர். அப்போது போராட்டத்தில் ஈடுபட்டவர்களை போலீசார் கைது செய்த போது நெரிசல் அதிகமானதால் குழந்தையுடன் வந்தவர்கள் கூட்டத்தில் இருந்து வெளியேற முயன்ற போது அங்கு பணியில் ஈடுபட்ட போலீஸ்காரர் குழந்தையை தாக்கியதாகவும், அதனால் குழந்தையின் கண்கள் சிவந்ததாகவும் குழந்தையின் தாய் கண்ணீர் மல்க கூறினார்.

டாக்டர்கள் சங்கம் கண்டனம்!

சமூக சமத்துவத்திற்கான டாக்டர்கள் சங்க பொதுச்செயலாளர் டாக்டர் ரவீந்திரநாத் வெளியிட்ட அறிக்கை: பணி நிரந்தரம், சம வேலைக்கு சம ஊதியம், ஊதிய உயர்வு உள்ளிட்ட 20 அம்ச கோரிக்கைகளை வலியுறுத்தி சென்னையில் செவிலியர்கள் போராடி வருகிறார்கள். அவர்களை அழைத்து பேசி கோரிக்கைகளை நிறைவேற்றி இருக்க வேண்டும். அதை விடுத்து, அவர்கள் மீது அடக்குமுறைகளை ஏவுவதும், வலுக்கட்டாயமாக கைது செய்திருப்பதும் கண்டனத்திற்குரியது. கைதான அனைத்து செவிலியர் சங்க நிர்வாகிகளையும், செவிலியர்களையும் தமிழ்நாடு அரசு உடனடியாக விடுவிக்க வேண்டும். சங்க நிர்வாகிகளை அழைத்துப்பேசி கோரிக்கைகளை நிறைவேற்ற வேண்டும்.

சந்தி சிரிக்கும் சட்டம் – ஒழுங்கு!

செயலற்ற விஜய் ஆட்சியில் கொலை, கொள்ளைகள்!

(05.10.2026)



1. திருநெல்வேலி மாவட்டம் வடக்கு வாகைகுளத்தில் முன் விரோதம் காரணமாக தச்சுத் தொழிலாளி வெட்டிக்கொலை .

2. நாகை மாவட்டம் கீழ்வேளூரை அடுத்த கூத்தூரில் நகைக்காக மூதாட்டி கொலை .

3. நீலகிரி மாவட்டம் கோத்தகிரியில் வட மாநில தொழிலாளர்கள் இடையே மோதல் ஒருவர் கொலை.

4. சென்னை வேளச்சேரியில் இருந்து நண்பர்களை பார்க்க மயிலாப்பூருக்கு வந்த ஏசி மெக்கானிக் நடுரோட்டில் சரமாரியாக வெட்டிக்கொலை .

5. சேலம் மாவட்டம் ஓமலூர் அடுத்த வெள்ளாளப்பட்டியில் த.வெ.க. பிரமுகர் பட்டப் பகலில் கழுத்தை அறுத்து கொடூர கொலை .

6. ஈரோடு மாவட்டம் நம்பியூர் வட்டம் லாகம்பாளையத்தில் ஆடு மேய்க்கச் சென்ற பெண் காட்டுப்பகுதியில் அடித்துக் கொலை.



7. கன்னியாகுமரி மாவட்டம் நாகர்கோவில் அருகே +2 மாணவியை கடத்திச் சென்று , மது கொடுத்து வன்கொடுமை செய்த மூன்று பேர் சிக்கினார்கள் .

8. விளாத்திகுளத்தில் தவெக பெண் நிர்வாகியை அடித்து துன்புறுத்திய, த.வெ.க. நிர்வாகி மீது போலீசில் புகார்.

9. திருவண்ணாமலை மாவட்டம் வந்தவாசி அருகே சைக்கிளில் பள்ளிக்குச் சென்ற 10ம் வகுப்பு மாணவியை வழிமறித்து கத்தியால் வெட்டிய , முகமுடி ஆசாமிகள்.

10. திருநெல்வேலி மாவட்டம் அகஸ்தியர் புரம் அருகே எட்டாம் வகுப்பு மாணவருக்கு பாலியல் தொல்லை கொடுத்த போலீஸ் ஏட்டு சிக்கினார் .

11. தேனி அருகே ஒன்பது வயது சிறுமிக்கு பாலியல் தொல்லை கொடுத்த 16 வயது சிறுவன் சிக்கினான்.



12. சென்னை பெரம்பூர் அருகே ஜடி நிறுவன ஊழியர் வீட்டு பீரோவை உடைத்து ஒன்பதரை லட்ச ரூபாய் பணம், 8 சவரன் நகை கொள்ளை .

13. நாகர்கோவில் அருகே தம்மத்து கோணத்தில் காண்ட்ராக்டர்க்கு மசாஜ் செய்வது போல் நடித்து செயின் பறித்த பிரபல பெண் youtuber சிக்கினார் .

14. மாதவரம் பால் பண்ணை அருகே டீக்கடைக்குள் நுழைந்து கத்தியை காட்டி மிரட்டி, கல்லாப்பெட்டியில் இருந்து 5000 ரூபாய் பணம் கொள்ளை .

15. சென்னை வியாசர்பாடி சாஸ்திரி நகரில் மது அருந்திய வாலிபர்களிடம் கத்தி முனையில் 3 சவரன் ஜெயின் மற்றும் பணத்தை பறித்த த.வெ.க. வட்ட செயலாளர் தலைமறைவு .



16. சென்னை துரைப்பாக்கம் பெருங்குடி அருகே நடந்து சென்ற வெல்டிங் தொழிலாளியை வழிமறித்து கத்தி முனையில் 9.500 ரூபாய் பணம் பறிப்பு .

17. சென்னை ஆதம்பாக்கம் அம்பேத்கர் நகரில் கடைகளில் கத்தியை காட்டி மிரட்டி மாமுல் வசூலித்த ரவுடி, பொது மக்கள் அச்சம்.

18. சென்னை கோடம்பாக்கம் டிரஸ்ட் புரத்தில் மது அருந்தும் போது ஏற்பட்ட தகராறில் இரண்டு வாலிபர்களுக்கு சராமாரியாக கத்தி குத்து .

19. சென்னை கொடுங்கையூர் முத்தமிழ் நகரில் குடிநீர் லாரி டிரைவருக்கு அரிவாள் வெட்டு .

20. தஞ்சாவூர் மாவட்டம் கபிஸ்தலம் அருகே கள்ளத்தனமாக நாட்டு வெடிகுண்டு தயாரிப்பு .

21. சென்னை எண்ணூர் மற்றும் வியாசர்பாடி, சோழிங்கநல்லூரில் தடை செய்யப்பட்ட கஞ்சா மற்றும் குட்கா ஆகியவை விற்பனை .



22. பெரம்பூரில் உள்ள செல்போன் கடைகளில் த.வெ.க நிர்வாகி வினித் மாமூல் கேட்டு மிரட்டல் , மாமூல் தர மறுக்கும் கடை உரிமையாளர்கள் மீது ரவுடிகளுடன் சென்று த.வெ.க.வினர் கொலைவெறித் தாக்குதல். த.வெ.க.வினர் தாக்குதலை காயமடைந்த செல்போன் கடைக்காரர் ஸ்டான்லி அரசு மருத்துவமனையில் அனுமதி. விஜயின் சொந்த தொகுதியிலேயே த.வெ.க.வினர் அட்டகாசத்தில் ஈடுபட்டு வருவதால் பொதுமக்களும் வியாபாரிகளும் கடும் அவதி.

23. சென்னை: மைலாப்பூரில் சத்தியசீலன் (19) என்ற இளைஞர் வெட்டி கொலை செய்த மர்ம கும்பல்! நண்பர்களுடன் பேசிக் கொண்டிருந்த போது பைக்கில் வந்து சீலனின் தொண்டை, தலை, கை உள்ளிட்ட பகுதிகளில் வெட்டி உள்ளனர். மருத்துவமனையில் அனு மதிக்கப்பட்ட நிலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழப்பு.